## தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகம்- 2015

தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் 2015 யூன் 17 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2015 யூன் 17 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 25 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 நிறுவனத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்தல்

2014 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 31 ஆம் இலக்க இலங்கை கடல்சார் பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 01 மற்றும் 71 ஆம் பிரிவுகளுக்கமைய உரிய அமைச்சரால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதியான 2015 யூன் 17 ஆந் திகதியின் பின்னர் 1999 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் அதிகாரச்சட்டம் நீக்கப்பட்டதுடன், நிறுவனத்தின் அனைத்து அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் மற்றும் அத்திகதியில் உள்ளபடியான அனைத்து பொறுப்புக்களும் கடல்சார் பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களாக சுவீகரிக்கப்பட்டிருந்தன.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவகத்தின் 2015 யூன் 17 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் 21 (இ) பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களுடன் தேறிய சொத்துக்கள் / மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்குரிய கணக்கீட்டுக் காலப்பகுதியான 2015 யூன் 17 ஆந் திகதிக்குரிய தகவல்களுடன் 2014 முழுமையான ஆண்டிற்கும் உரிய தகவல்கள் ஒப்பீட்டு ரீதியில் சமர்ப்பிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், நியமத்தின் 66 ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகள் முழுமையாக ஒப்பீட்டு ரீதியற்றவை என்பதற்கு தேவையான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 47 ஆம் பந்திக்கமைய இலகுவில் மாற்றங்களுக்கு உள்ளாகும் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கான வருடாந்த மீள் மதிப்பீடும், நியாயப் பெறுமதியில் கவனத்திற் கொள்ளக்கூடியதல்லாத அளவிலான மாற்றங்களை மாத்திரம் கொண்ட ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்காக மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை மீள்மதிப்பீடு செய்தல் போதுமானது என குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள தேறிய பெறுமதி ரூபா 421,275,044 தொகையான நிறுவனத்தின் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட 1999 ஆம் ஆண்டு முதல் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 15 ஆம் பந்திக்கமைய இறுதி இருப்பு, கிரயம் அல்லாத தேறிய தேறக்கூடிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைவான பெறுமதிக்கு கணக்கிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இருப்பினை மதிப்பீடு செய்யாமல் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட இருப்பின் பெறுமதியான ரூபா 1,330,395 தொகை மீளாய்வுக் காலப்பகுதியில் இறுதியில் உள்ளபடியான இருப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் காலப்பகுதியின் இறுதியில் உள்ளபடியாக அரசின் மூலதன மானியங்களின் பெறுமதி ரூபா 608,764,884 தொகை மற்றும் துறை ரீதியான ஆற்றல்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து கிடைத்திருந்த மூலதன மானியம் ரூபா 132,721,471 ஆக இருந்ததுடன், இவை பிரதிநித்துவம் செய்யும் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 421,275,043 ஆகும். எனினும் அந்த சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டிராததுடன், அதற்கான கணக்கீட்டு கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழ் வருமாறு.

(i) 05 வருட சேவைக் காலத்தினை பூர்த்தி செய்த ஊழியர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சேவைக்காலம் 01 வருடம் தொடக்கம் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருந்தன.

(ii) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை 1.8 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களின் வகைப்படுத்தலுக்கு இணங்கும் வகையில் சொத்துக்களின் வகைப்படுத்தலொன்று கணக்குக் குறிப்பு 9 இன் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு காலப்பகுதியினுள் சுவீகரிக்கப்பட்ட நிலையான சொத்துக்களுக்காக மாத்திரம் பெறுமானத்தேய்வு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், ஏனைய சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமான குறித்த காலப்பகுதிக்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 23,540,737 இனால் குறைவாகவும் நிலையான சொத்துக்களின் தேறிய பெறுமதி அந்த அளவினால் மிகைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வு காலப்பகுதிக்குரிய ஊழியர் பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(இ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலும் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கீடுகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஈ) ரூபா 8,217,153 கூட்டுத்தொகையான விழா முற்பணம் மற்றும் இடர் கடன் மீதிகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிப்பதற்கு பதிலாக நிதி நிலமைக் கூற்றில் முதலீடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) 2015 யூன் 17 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 85,267,921 தொகையான நடைமுறை வேலைகளின் பெறுமதி நிதிநிலமைக்கூற்றில் நடைமுறை வேலைகளாக காண்பிப்பதற்கு பதிலாக ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 தொங்கல் கணக்கு

நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் முன் கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கின் மீதியான ரூபா 85,433 தொகை மீளாய்வுக்குரிய காலப்பகுதியின் இறுதி வரையிலும் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் கணக்கு விடயங்களின் எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | பெற வேண்டிய வைப்புக்கள் | 2,106,936 | வைப்புப் பதிவேடுகள், முற்பணப் பதிவேடுகள் |
| (ii) | முற்பணங்கள் | 3,740,168 | |
| (iii) | செலுத்த வேுண்டிய பிடிகாசு | 2,118,644 | |

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலும் மாணவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 10,688,673 கூட்டுத்தொகையான பாடநெறிக் கட்டணங்களை அறவிடாமல் பட்டச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த பணம் அறவிடப்பட முடியாத நிலையில் காணப்பட்டதுடன் 2016 ஒக்தோபர் 06 ஆந் திகதிய கட்டுப்பாட்டுச் சபையின் கூட்டத்தின் போது அந்த கட்டணங்களை பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2003 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய அறவிடப்பட வேண்டிய ரூபா 798,671 தொகையான மாணவர் விடுதிக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், மாணவர்கள் பாடநெறிகளை நிறைவு செய்து வெளியேறிச் சென்றுள்ளமையால் அந்த பணம் அறவிடப்பட முடியாத நிலையில் காணப்பட்டது. அதற்கு மேலதிகமாக 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டின் மீளாய்வு காலப்பகுதியின் இறுதி வரையிலும் ரூபா 2,861,183 தொகையான விடுதிக் கட்டணங்கள் அறவிடப்படாது காணப்பட்டன.

(இ) மீளாய்வு காலப்பகுதியின் இறுதியில் செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ஊழியர் நலன்புரி நிதியம் ரூபா 6,624,699 தொகை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 191,464 கூட்டுத்தொகையான சுனாமி கடன் மீதியினை மீளாய்வு காலப்பகுதியினுள்ளும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571(3) | வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 வருடங்களை கடந்திருந்த ரூபா 2,056,844 கூட்டுத்தொகையான வைப்புக்கள் மற்றும் ரூபா 58,000 தொகையான மாணவர் விடுதி வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரச வருமானத்திற்கு எடுப்பதற்கோ தீர்ப்பனவு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 394 | 2012 ஆம் ஆண்டு தொடக்கம் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்படும் 55 இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளுக்குரிய ரூபா 697,854 கூட்டுத்தொகை தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 835 (1)(இ) மற்றும் 2(ஈ) | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க உரிய அமைச்சின் செயலாளரின் அதிகாரம், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீடு அல்லது அவ்வாறு இல்லையெனின் அமைச்சின் செயலாளருக்கு தீர்மானம் எடுப்பதற்காக முன்வைக்கப்படாது 03 மாணவர் விடுதிகளை குத்தகைக்கு எடுப்பதற்காக குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு மீளப்பெறக்கூடிய ரூபா 1,708,500 தொகையான முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | தேறிய பெறுமதி ரூபா 421,275,044 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 31,211,625 கிரயமான கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் 17 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதிக்கான நிறுவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 6,173,788 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன், முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 71,013,054 ஆகும். எவ்வாறெனினும், கணக்குகளை தயாரிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காலப்பகுதியிலான அசாதாரண நிலமைகள் காரணமாக அதற்குரிய நிதி செயலாற்றலினை மதிப்பிட முடியாதிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1999 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவக அதிகாரச்சட்டத்திற்கு இணங்க மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு எத்தனித்துள்ள நபர்களின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ ஆற்றல்களை விருத்தி செய்யும் பணிக்காக இந்த நிறுவனம் தாபிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், பயிற்சி பாடநெறிகளை நடாத்தியமையை தவிர அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பின்வரும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பான பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(i) தேசிய மற்றும் சர்வதேச ஒருங்கிணைப்புக்களின் நிதியுதவியுடன் கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் துறையின் கல்வி பற்றிய கலந்துரையாடல் மாநாடு, கூட்டு ஆலோசனைகளை நடாத்துதல் மற்றும் நடாத்துவதற்கான வேலைத்திட்டங்களை அமைத்தல்.

(ii) கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் கலையின் கல்வி மற்றும் செயற்திட்ட பயிற்சி தொடர்பான பரிசோதனைகள், மதிப்பாய்வுகள், மற்றும் விசாரணைகள் நடாத்தப்படுவதை மேம்படுத்தல்.

(iii) நிறுவகத்தின் இலக்குகளை ஒத்த இலக்குகளை கொண்ட இலங்கையின் அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுடன் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை பரிமாறிக்கொள்ளல் அல்லது வேறு முறைகளுடாக ஒத்துழைப்புடன் செயற்படல்.

(அ) நிறுவகத்தின் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் உள்ளபடியான செயலாற்றல் தொடர்பான தகவல்கள் 2015 ஆம் ஆண்டுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வு காலப்பகுதிக்குரிய செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியாதிருந்தது. எவ்வாறெனினும், 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடடிக்கைத் திட்டத்திற்கமைய நிறுவனத்திற்கு சொந்தமான 08 கல்லூரிகளில் நடாத்தப்படும் டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பத்திர பாடநெறிகளின் எண்ணிக்கை மற்றும் அதற்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

| கல்லூரி | இலக்கு | | உள்ளபடியானவை | | சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| | பாடநெறிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பாடநெறிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | பாடநெறி | மாணவர்கள் |
| தங்கல்ல | 23 | 529 | 6 | 158 | 26 | 30 |
| நீர்கொழும்பு | 14 | 420 | 4 | 66 | 28 | 15 |
| மட்டக்குளிய | 09 | 194 | 6 | 111 | 67 | 57 |
| மட்டக்களப்பு | 16 | 807 | 3 | 49 | 19 | 6 |
| காலி | 12 | 255 | 3 | 42 | 25 | 16 |
| யாழ்ப்பாணம் | 08 | 275 | 3 | 36 | 38 | 13 |
| களுத்துறை | 09 | 140 | 2 | 20 | 33 | 14 |
| திருகோணமலை | 10 | 105 | 3 | 54 | 30 | 51 |
| | 101 | 2725 | 30 | 536 | 30 | 20 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டினுள் 06 டிப்ளோமா பாடநெறிகள் மற்றும் 26 சான்றிதழ் பத்திர, நடைமுறை மற்றும் ஏனைய பாடநெறிகளை நடாத்திச் செல்ல திட்டமிடப்பட்டிருந்ததுடன், அதற்காக முறையே 367 மற்றும் 2,358 மாணவர்கள் என 2,725 மாணவர்களை இணைத்துக்கொள்ள இலக்கிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் மீளாய்வு காலப்பகுதியினுள் முறையே 76 மற்றும் 460 மாணவர்கள் எனுமாறு 536 மாணவர்கள் மாத்திரமே இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர்.

அதற்கமைய பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 21 மற்றும் 20 சதவீதமான மிகவும் குறைவான பெறுமதியினை கொண்டிருந்தது. மேலும் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களுக்கும் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் சதவீதத்தை கருத்திற்கொள்ளும் போது மட்டக்குளிய, திருகோணமலை, மற்றும் தங்கல்ல பல்கலைக்கழகம் ஆகியவற்றிலிருந்து முறையே 57 சதவீதம், 51 சதவீதம், மற்றும் 30 சதவீதமாக இருந்த போதிலும், ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களிலும் 20 சதவீதத்திற்கும் குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ii) பாடநெறிக்காக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த மேற்படி 536 மாணவர்களிடையே, பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ள எண்ணிக்கை 459 ஆக இருந்த போதிலும், 120 மாணவர்கள் அல்லது 26 சதவீதமானோர் பாடநெறியை கைவிட்டுச் சென்றிருந்தனர்.

(iii) ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது நிறுவகத்திற்குரிய 08 கல்லூரிகளால் 32 பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 14 பாடநெறிகள் மற்றும் திட்டமிடப்படாத 03 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், 07 கல்லூரிகளின் டிப்ளோமா பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மட்டக்குளிய, மற்றும் களுத்துறை போன்ற பல்கலைக்கழகங்களில் மாத்திரம் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பல்கலைக்கழகங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறிகளின் சதவீதத்தை திட்டமிடப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது மட்டக்குளிய பல்கலைக்கழகத்தினை தவிர ஏனைய அனைத்து பல்கலைக்கழகங்களிலும் 40 சதவீதத்திற்கும் குறைவான பெறுமானத்தை கொண்டிருந்தன.

(iv) பாடநெறிகளுக்காக மாணவர்களை இணைத்துக்கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தல் 2014 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும், 8 பல்கலைக்கழகங்களின் மாணவர்களை இணைத்துக்கொள்ளல் வருடத்தின் பல்வேறு காலப்பகுதிகளில் இடம்பெற்றிருந்துது. பல்கலைக்கழகங்களில் ஒரு பாடநெறிக்காக மாணவர்களை இணைத்துக்கொள்ளல் பல்வேறு தினங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இணைத்துக் கொள்ளல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் தொடர்பில் 08 கல்லூரிகளிலும் ஒத்த தன்மையொன்று இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

திட்டமிடப்பட்டவாறு பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கும் மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கும் முடியாதிருப்பதற்கு பின்வரும் காரணங்கள் தாக்கமளித்திருந்ததாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

- மாணவர்களுக்கு தேவையான வசதிகள் குறைவாக காணப்படல் மற்றும் இல்லாதிருத்தல்.
- மாணவர்களிடமிருந்து பாடநெறிகளுக்கு போதியளவான விண்ணப்பங்கள் கிடைத்திருக்காமை.
- பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு தேவையான மதியுரையாளர்கள் மற்றும் கல்லூரி விரிவுரையாளர்கள் இல்லாதிருந்தமை.

- சில பாடநெறிகளின் எதிர்பார்க்கப்பட்ட கால எல்லையினுள் நிறைவு செய்ய முடியாதிருந்தமை. (கடலின் கொந்தளிப்பு காரணமாக கடலுக்குச் செல்லும் பணிகளை பிற் போடுவதற்கு நேர்ந்தமை மற்றும் விரிவுரையாளர்களின் பற்றாக்குறை)

- கடலோட்டு எந்திரவியலாளர் மற்றும் டெக் உத்தியோகத்தர் பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், குறித்த நிலையங்களுக்காக ISO 9001: 2008 தரச்சான்றிதழ் மற்றும் கடற்படை அமைச்சில் பதிவு செய்யப்பட்டிராமல் 2015 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்க முடியாதிருந்தமை.

- தேவையான மனித வளத்தின் பற்றாக்குறையால் பல மத்திய நிலையங்களுக்கு ஒரே விரிவுரையாளர்கள் / கல்லூரி விரிவுரையாளர்களை ஈடுபடுத்தி பாடநெறிகள் நடாத்தப்படுகின்றமையால் அனைத்து நிலையங்களிலும் ஒரே தடவையில் பாடநெறிகளை ஆரம்பிக்க முடியாதிருந்தமை.

**(ஆ) பட்டப் பாடநெறிகள்**

--------------------------------

மீளாய்வுக் காலப்பகுதியினுள் பட்டப் பாடநெறிகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்கள் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) மீளாய்வுக் காலப்பகுதியினுள் 04 பட்டப் பாடநெறிகளுக்காக 87 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன், முன்னைய ஆண்டின் 03 பாடநெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட 107 மாணவர்களுடன் ஒப்பிடும் போது 23.4 சதவீதமான குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

(ii) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 05 பாடநெறிகளுக்காக 175 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், 87 மாணவர்களையே அல்லது 50 சதவீத மாணவர்களை மாத்திரமே இணைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

கிடைக்கப்பெற்ற சுமார் 250 அளவான விண்ணப்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 150 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைகளுக்கு முகங்கொடுத்ததாகவும், அவர்களுள் 87 பேர் மாத்திரம் பாடநெறிகளுக்காக பதிவு செய்துள்ளதாகவும், ஆகையால் இலக்கிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை இணைத்துக்கொள்ள முடியாது போனதாகவும் உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) பாடநெறிகளிளை அங்கீகரித்தல்**

--------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பாடநெறிகளை அங்கீகரித்தல் அந்தந்த கல்லூரிகளினால் மேற்கொள்ளப்படுவதுடன், மீளாய்வு காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட 14 பாடநெறிகளில் 04 பாடநெறிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

(ii) மட்டக்குளிய கல்லூரியினால் வழங்கப்பட்டிருந்த தகவல்களுக்கமைய 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்காக 32 NVQ சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், அந்த மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது குறிப்பிடப்பட்டிருந்த NVQ 4 மற்றும் 5 இற்கான மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட பரிசோதனையில் அந்த பாடநெறிகளுக்காக NVQ 2 மற்றும் 3 வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக அந்த பாடநெறிகளின் தரம் குறைவான மட்டத்தில் நிலவுவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

NVQ தரத்தினை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான அடிப்படை வசதிகள் மற்றும் விரிவுரையாளர்களின் பற்றாக்குறையால் அங்கீகார நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்டமையால் இதுவரையிலும் NVQ 4, 5 நிலைகளில் பாடநெறிகளை நடாத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) பாடநெறிகளுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விளம்பரப்படுத்தல் செலவினம்**

---

மீளாய்வாண்டின் போது பல்வேறு பாடநெறிகளுக்காக மாணவர்களை இணைத்துக் கொள்வதற்காக பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 3,669,132 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வுக் காலப்பகுதியினுள் பட்டப் பாடநெறிகளுக்காக 87 மாணவர்கள் மற்றும் ஏனைய பாடநெறிகளுக்காக சுமார் 536 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தமையால், விளம்பரங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினத்திற்கு ஒப்பாக போதியளவு எண்ணிக்கையான மாணவர்கள் அதற்காக விண்ணப்பித்திருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மெற்கொள்ளப்படுகின்றன.

(i) தங்கல்லையில் அமைந்துள்ள இரு விடுதிகளுக்காக 2015 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2016 மார்ச் 14 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய குத்தகை உரித்துறுதி பதிவு செய்யப்பட்டிராததுடன், விடுதிகளை குத்தகைக்கு எடுப்பதற்காக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த ஏனைய அனைத்து உடன்படிக்கைகளுடனும் அணைத்தல் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மட்டக்குளியவில் அமைந்துள்ள விடுதி 2015 மார்ச் 18 ஆந் திகதி மீளக் கையளிக்கப்பட்டிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் 03 ஆம் பிரிவிற்கமைய குத்தகைக் காலத்தின் இறுதியில் நிலுவைப்பட்டியல்கள் மற்றும் குத்தகை ஆதனத்திற்கு ஏதேனும் அழிவு நட்டங்கள் ஏற்பட்டிருக்குமாயின் அதற்காக மதிப்பீட்டாளரொருவரை கொண்டு மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் அந்த பணம் கழிக்கப்பட்டு ஆதார வைப்பின் எஞ்சிய பணம் ஒரே தடவையில் குத்தகை வழங்குனரால் குத்தகையாளர் நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், குத்தகை வழங்குனரின் பழுதுபார்த்தல் மதிப்பீடான ரூபா 743,000 தொகை மற்றும் கல்லூரியின் பொறியிலாளரின் மதிப்பீடு ரூபா 162,250 தொகையானமையால் கணக்காய்வு திகதியான 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 840,000 தொகையான வைப்புக்களை அறவிடுவதற்கு முகாமைத்துவத்தினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி உதவியின் கீழ் ரூபா 45 மில்லியன் செலவிடப்பட்டு யாழ்ப்பாணம் கல்லூரியின் புதிய இரண்டு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டினுள் அங்கு 08 சான்றிதழ் பத்திர பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 275 மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், 03 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டு 36 மாணவர்கள் எனும் குறைந்த அளவானோர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். மேலும், மட்டக்குளிய மற்றும் திருகோணமலை தவிர்ந்த ஏனைய கல்லூரிகளில் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தினை விட குறைவான பெறுமதியினை கொண்டிருந்தமையால் அந்த கல்லூரிகளின் பௌதீக வளங்கள் விளைவற்றுக் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதேச கல்லூரிகளுக்காக கடந்த வருடத்தில் துறை ரீதியான திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பயிற்சி உபகரணங்களின் பெறுமதி ரூபா 2,178,150 ஆன 56 வகையான உபகரண வகைகள் 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் குறித்த பிரதேுச கல்லூரிகளுக்கு பகிர்ந்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்திற்கு சொந்தமான 08 வாகனங்கள் நீண்ட காலமாக பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 முறையாக சுவீகரிக்கப்படாத காணி மற்றும் ஆதனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தினால் ஆரம்பம் முதல் பயன்படுத்தப்பட்டவாறு காணப்படும் தலைமை அலுவலகம் உள்ளடங்கலான 08 கல்லூரிகளின் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் ஏனைய ஆதனங்களின் உரித்து நிறுவனத்திற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அந்த சொத்துக்களை மேம்படுத்துவதற்காக மீளாய்வு காலப்பகுதியின் இறுதி வரையிலும் ரூபா 309,335,589 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் 07 கப்பல்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வு காலப்பகுதியின் இறுதி வரையிலும் ரூபா 11,750,593 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவற்றுள் 06 கப்பல்களின் உரித்து மற்றும் நிறுவனத்தின் வாகன அணியினுள் உள்ளடங்கியுள்ள 04 வாகனங்களின் உரித்து 2016 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறுவனத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2015 யூன் 17 ஆந் திகதியில் உள்ளபடியான நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 286 ஆக இருந்ததுடன், உள்ளபடியான பதவியணி 210 ஆனமையால் 89 வெற்றிடங்கள் காணப்பட்டன. நிறுவனத்தின் உயர் முகாமைத்துவ பதவிகளில் 04 பணிப்பாளர் பதவிகள் மற்றும் 08 விரிவுரையாளர்கள் உள்ளடங்கலான நிறைவேற்று மட்டத்திலான 20 உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் நிலவியதுடன், கீழ் மட்டத்திலான உத்தியோகத்தர்களால் நிறுவனத்தின் நாளாந்த நடவடிக்கைகள் மேவுகை செய்யப்பட்டிருந்தன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 03 காவலாளர்களையும் 10 தொழிலாளர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் உள்ளடக்கப்படாத மீகாமன் ஒருவர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது 2014 ஆம் ஆண்டின் போது இணைத்துக் கொள்ளப்பட்டு, மாதமொன்றிற்கு ரூபா 100,000 படி 2015 சனவரி முதல் யூன் மாதம் வரையிலும் ரூபா 525,000 தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அந்த நியமனங்களுக்காக பத்திரிகை அறிவித்தலொன்றை பிரசுரித்து தகைமை வாய்ந்த உத்தியோகத்தரொருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென 144 ஆவது கட்டுப்பாட்டுச் சபை கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிறுவனத்தின் வாழ்க்கைத் தொழில்சார் மற்றும் உயர்கல்வி பிரிவுகளின் பாடநெறிகளை தொடரும் மாணவர்களுக்காக வர்த்த கப்பல்களுக்கான தொடர்ச்சித்தன்மை சான்றிதழினை (CDC சான்றிதழ்) பெற்றுக்கொள்வதற்கு ISO 9001 / 2008 தரச்சான்றிதழை நிறுவனத்திற்கு பெற்றுக்கொள்ளல் கட்டாயமாக்கப்பட்டிருந்தது. அதற்காக கப்பற்துறையின் முதலாவது வகுப்பிலான கடற்படை உத்தியோகத்தர் ஒருவரை நிறுவனத்திற்கு இணைத்துக்கொள்ளல் கட்டாயமாக இருந்ததாகவும், வர்த்தகம் மற்றும் கடல்சார் திணைக்களத்தின் வாய்மொழி மூலமான பரிந்துரைகளின் பிரகாரம் பணிக் கையளிப்பு அடிப்படையில் மீகாமன் ஒருவரை இணைத்துக்கொள்ள முன்னாள் கட்டுப்பாட்டு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்ததாக உபவேந்தரால் இது தொடர்பில் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமின்றி ஒப்பந்தம் மற்றும் தற்காலிக அடிப்படையில் 14 உத்தியோகத்தர்களை இணைத்துக் கொண்டு 2015 சனவரி முதல் யூன் 17 ஆந் திகதி வரை ரூபா 2,674,313 தொகை சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்தினால் 2015 யூன் 15 ஆந் திகதி 08 முகாமைத்துவ உதவியாளர்கள், 06 அலுவலக உதவி ஊழியர்கள், மற்றும் சாரதியொருவர் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய விண்ணப்பங்களை கோருதல் அரச வர்த்தமானியில் அல்லது பத்திரிகையில் அறிவித்தலொன்றின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நேர்முக பரீட்சை சபையொன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக எழுத்துமூலமான பரீட்சையொன்றினை நடாத்தப்படாது அந்த உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

மேற்படி அனைத்து உத்தியோகத்தர்களும் ஒரே மாகாணத்தில் மாத்திரம் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்ததாக அவர்களின் முகவரியொன்றினை பரிசோதனை செய்த போது அவதானிக்கப்பட்டமையால் இந்த ஆட்சேர்ப்புக்கள் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஏற்பாடுகளுக்கு முரணாக வைளிப்படைத்தன்மை மற்றும் முறையற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டது.

(உ) கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2009 ஆம் ஆண்டின் போது தேசிய கடற்றொழில் மற்றும் கடலோட்டு எந்திரவியல் நிறுவனத்தின் உத்தியோகத்தர்களின் நியமனத் திகதிகள் முற்திகதியிடப்பட்டிருந்த போதிலும் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 1:10 ஆம் பந்திக்கமைய உரிய அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய உதவி பதிவாளர் (மாணவர் அலுவல்கள்) பதவிக்கு விண்ணப்பிக்கும் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு உரிய துறையில் மூன்று வருட சேவை அனுபவம் அல்லது உள்ளக ரீதியான 05 வருட நிர்வாக அனுபவம் காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அந்த பதவிக்காக 2012 ஒக்தோபர் 16 ஆந் திகதி இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தருக்கு அவ்வாறானதொரு சேவை அனுபவம் காணப்படவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வவ்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) பெறுகைகள் | | விடுதிகளுக்காக கட்டிடங்களை குத்தகைக்கு பெற்றுக் கொள்ளும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட்டிருக்காமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | - | சொத்துக்களை சட்டரீதியாக சுவீகரிக்காமை. |
| | - | உபகரணங்களை பகிர்ந்தளிக்காமையால் அவை விளைவற்றுக் காணப்படுகின்றமை. |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | - | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்பாமையால் மற்றும் ஆட்சேர்ப்பு செய்தல் வெளிப்படைத் தன்மை இல்லாமலும் முறையற்ற விதத்திலும் காணப்படுகின்றமை |